1977 ஆகஸ்ட் 9]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ரூல் 42, 41 கீழ் உள்ளவை முடிந்த பிறகு வேறு பொருள்கள் பற்றி பேச வேண்டும். திரு. ஜேம்ஸ் அவர்கள் இதை இப்பொழுது எழுப்பியதே தவறு. கவன ஈர்ப்புத் தீர்மானம் கூட வரவில்லை. அதற்குள்ளாக திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுந்து விட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் முடிந்து விவாதத்திற்குப் போவதற்கு இடையே உள்ளதைத்தான் 'ஸீரோ ஹவராக' உபயோகப்படுத்துவது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை முடிந்துவிட்டது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, கவன ஈர்ப்பு....

திரு. ஆர். மணிமாறன் : கொடுக்கப்பட்டிருக்கும் அந்த ரிபோர்ட்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் வராது.

திரு. ஆர். மணிமாறன் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ரிப்போர்ட் மேல் பேசக்கூடாது. எல்லாம் முடிந்துவிட்டது. தயவு செய்து அமருங்கள்.

7. கவன ஈர்ப்பு.

(அ) கைத்தறித் துணிகள், இராமநாதபுரம் மாவட்டம் எமனேஸ்வரம் பகுதியில் உள்ள நெசவாளர் சங்கங்களில் இலட்சக் கணக்கில் தேங்கியிருப்பதால், நெசவாளர்கள் வேலையற்றிருக்கும் நிலை குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே. கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறிப் பஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

'' இராமநாதபுரம் மாவட்டம் எமனேஸ்வரம் பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்களிடம் ரூ. 40 இலட்சத்திற்கு அதிகமாகத் துணிகள் தேங்கியதன் காரணமாக ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் வேலையற்றிருக்கும் நிலைமை குறித்து.''

*மாண்புமிகு திரு. கே. ராஜா முகமது : தலைவர் அவர்களே, எமனேஸ்வரம்-பரமக்குடி பகுதியில் 35 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 4,000 கைத்தறி நெசவாளர்களைக்கொண்டு

இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் யாவும் 100 நெ., 80 நெ. சேலைகளை உற்பத்திசெய்து வருகின்றன. இச்சங்கங்கள் சராசரியாக சுமார் 20 இலட்சம் மதிப்புள்ள துணிகளை மாதந்தோறும் உற்பத்தி செய்து வருகின்றன. இப்பகுதிச் சங்கங்களில் தற்பொழுது சேலைகள் இருப்பு சுமார் 25 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை என்று கூறப்பட்டுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் ரூ. 10 இலட்சம் வரை சரக்குகளைக் கொள்முதல் செய்ய திட்டமிட்டு ஏற்கெனவே ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகளைக் கொள்முதல் செய்து விட்டது. மேலும் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து வருகிறது. இச் சங்கங்களிலிருந்து கடந்த 5 மாதங்களில் கோ-ஆப்டெக்ஸ் ரூ. 45 இலட்சம் மதிப்புள்ள துணிகளைக் கொள்முதல் செய்துள்ளதென்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

முகவை மாவட்ட மத்திய வங்கி இந்த 35 சங்கங்களுக்கு காசுக் கடன் (Cash/credit) ரூ. 52·28 இலட்சம் வரை வரம்பு வைத்து வழங்கியுள்ளது. இக்காசுக்கடனுக்கு இணையாக சரக்கு இருப்பு ரூ. 25 இலட்சத்திலிருந்து 30 இலட்சம் ஆகும். இச்சங்கங்கள் அங்கத்தினர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுக்கும் அளவுக்கு இவைகள் உச்ச கடன் வழங்கும் தன்மை பெற்று உள்ளன. மேலும் தற்போதைய கைத்தறித் துணிச் சரக்கு இருப்பு $1\frac{1}{2}$ மாதத்திய உற்பத்தியாகும். இது இச்சங்கங்களின் வழக்கமான சரக்கு இருப்பு ஆகும். இச்சங்கங்களின் இச்சரக்கு இருப்பு கவலை அளிக்கக் கூடிய அளவுக்கோ, அங்கத்தினர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுக்க முடியாத அளவுக்கோ நிச்சயமாக இல்லை எனக் கூறலாம். கோ-ஆப்டெக்ஸ் சரக்குக் கொள்முதலைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மேலும் அவற்றுக்குத் தீபாவளி காலத்தில் சிறப்புத் தள்ளுபடி அறிவிக்கப்பட்டவுடன் நல்ல விற்பனை கிடைக்கும். முகவை உதவி இயக்குநர், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து ரூ. 40,000 வரை கடன் மூலம் நூல் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளார். நெசவாளர்களுக்குத் தேவையான எல்லா மூலப்பொருள்களும் தடங்கலின்றி வழக்கம் போல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று கூறி அமருகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, ஒன்றரை மாத உற்பத்தி தேங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது 30 லட்சத்திற்கும் மேலாக இருக்கும். கோ-ஆப்டெக்ஸ் மூலமாக 10 லட்சம் வரை கொள்முதல் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருந்தும் இதுவரை இரண்டு அல்லது இரண்டரை இலட்சம் வரை கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மீதியை உடனடியாகக் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் தேங்கியிருக்கும் இந்த 30 லட்சம் ரூபாய் சரக்கில் சரிபாதி அளவுக்காவது கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

1977 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு திரு. கே. ராஜா முகமது : தலைவர் அவர்களே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளில் 50 சதவீதம், 60 சதவீதம் வரையுள்ள துணிகள் கோ-ஆப்டெக்ஸ் மூலம் வினியோகம், விற்பனை செய்யப்பட்டு வருகிறது, மேலும் இந்தத் தேக்கங்கள் இல்லாதவாறு, உற்பத்தி வினியோகம். இவை, கோ-ஆப்டெக்ஸ் மூலம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை, இரண்டு லட்சம் ரூபாய் அளவுக்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து கொள்முதல் நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பெரியாறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடாததால் மேலூர் தொகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. அ. மா. பரமசிவன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு நீர்த் தேக்கத்திலிருந்து இதுவரையில் தண்ணீர் திறந்து விடாததால் மேலூர் சட்டமன்றத் தொகுதிக்கு வேண்டிய நீர் கிடைக்காததால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அவசர நிலை பற்றியும் அதற்கு உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்லந்திரி மதகுப் பலகை மேலுள்ள இருபோக சாகுபடி நிலங்களின் பாசனத்திற்காக பெரியாறு தலைமைக் கால்வாயைத் திறக்கும் இயல்பான தேதி ஜூன் முதல் நாளாகும். ஆகஸ்ட் 15-ம் தேதி அன்றுதான் ஒருபோக சாகுபடி செய்யும். மீதமுள்ள நிலப் பரப்புகளுக்குத் தண்ணீர் வழங்க வேண்டும். மேலூர் வட்டத்திலுள்ள நிலப்பரப்பு பெரும்பாலானவை ஒரு போக சாகுபடி நிலங்கள்தான் ஆகும்.

இந்த வருடம் இயல்பான தேதியாகிய ஜூன் மாதம் முதல் நாளன்று கல்லந்திரி மதகுப் பலகை மேலுள்ள இரு போக சாகுபடி நிலங்களின் பாசனத்திற்காகத் தண்ணீர் ஏற்கனவே திறந்துவிடப்பட்டாயிற்று நீர்த்தேக்க நிலை சாதகமாக உள்ளதால் குறிப்பிட்ட ஆகஸ்ட் 15-ஆம் தேதியன்று ஒருபோக சாகுபடி நிலங்களுக்கும் தண்ணீர் திறந்துவிடக் கருதப்படுகின்றது.